| Headline | LED lights in the village roads | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 03 Oct 2017 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 430 cm² | Journalist | NULL |
| PR Value | RM 7,505 | | |
| | | | |



# கிராமத்து சாலைகளில் எல்.இ.டி. விளக்குகள்

(நடராஜா பெருமாள்)

பெரா, அக். 3-

நாடு முழுவதும் கிராமத்து சாலைகளில் விளக்குகளை பொருத்தும் திட்டத்தின் கீழ் மின்சார கட்டணங்களை செலுத்துவதற்காக அரசாங்கம் கடந்த ஆண்டு வெ.7 கோடியை செலவழித்தது என கிராமப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கூப் கூறினார்.

கடந்த 2016-இல் தீபகற்பத்தில் உள்ள கிராமங்களில் 225,000 விளக்குகளும், சபாவில் 31,811 மற்றும் சரவாவில் 27,295 விளக்குகளும் பொருத்தப்பட்டன. மொத்தமாக இதன் எண்ணிக்கை 317,000 தெரு விளக்குகள் ஆகும். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு யூனிட் விலை வெ.17.04 என்ற அடிப்படையில் கட்டணம் செலுத்தப்பட்டது.

இந்த ஆண்டிற்கு இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். காரணம், இந்த ஆண்டில் 120,000 விளக்குகளை பொருத்துவதற்கு பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக் வெ.10 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார் என்று சப்ரி யாக்கூப் தெரிவித்தார்.



சாலைகளில் பொருத்தப்பட்ட எல்.இ.டி விளக்குகளை அமைச்சர் காட்டுகிறார்

அவற்றில் 6,333 எல்இடி வகை விளக்குகளாகும். கிராமங்களில் உள்ள முச்சந்தி, மக்கள் இரவு நேரம் நடமாட்டம் உள்ள பள்ளிகள், பள்ளிவாசலுக்கான சாலைகளில் இவை பொருத்தப்படும்.

இன்றைய தேதி வரை விளக்குகள் பொருத்தும் பணிகள் சுமார் 80 விழுக்காடு பூர்த்தியாகியுள்ளது. ஆண்டு இறுதிக்குள் அது முழுமையாக பூர்த்தியடையும் என்றார் அவர்.

இங்குள்ள கம்போங் குவாயில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற எல்.ஜே.கே2017 எனும் எல்.இ.டி. விளக்குகள் பொருத்தும் நிகழ்வின் போது அவர் நிருபர்களிடம் இவ்விவரங்களை வெளியிட்டார். இந்த வகை விளக்குகள் சாதாரணரகத்தை விட ஐந்து மடங்கு வெளிச்சத்தை தரக்கூடியதாகும்.

நாட்டில் இயங்கி வரும் எல்லா கிராமங்களுக்கும் எல்இடி சாலை விளக்குகள் பொருத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மக்களின் நலன்களை பாதுகாப்பதில் டத்தோஸ்ரீ நஜீப் தலைமையிலான தேசிய முன்னணி அரசு முக்கியத்துவம் வழங்குகிறது. மேலும், அதில் எந்த பாகுபாடும் காட்டவில்லை என்பதை பொது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் கூறினார்.




பெராவில் விளக்குகள் பொருத்தும் திட்டத்தின் தொடக்க நிகழ்வு

இந்நிகழ்வில் பகாங் மின்சார வாரிய அதிகாரி அமாலியா அப்துல் காதிர் உரையாற்றுகையில் 2003-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கிராமத்து சாலைகளில் விளக்குகளை பொருத்தும் திட்டத்தின் கீழ் இதுவரை 15 கோடி வெள்ளி செலவில் 3 லட்சம் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். பகாங் மாநிலத்தில் மட்டும் 25,612 கிராமத்து சாலை விளக் குகள் பொருத்தப்பட்டுள்ளதாக கூறினார். இந்நிகழ்வில் பகாங் மின்சார வாரியத்தின் உயர் அதிகாரிகள், கிராமத்து தலைவர்கள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Powered by: iSENTIA